கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.4/2016

பி.வா.சா. –1– கலையரசி

நாள். 04.03.2025

<u>பி.வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் ஆஜராகி 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சொல்லப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கில் நான் 2 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். 3 ஆம் பிரதிவாதி பானுபிரியா எனது மகள் என்றால் சரிதான். வழக்கின் 1 ஆம் பிரதிவாதி எனது தந்தையின் மூத்த தாரத்து மகன் ஆவார். 4 ஆம் பிரதிவாதி எனது அக்காவின் கணவராவார். 5,6,7 பிரதிவாதிகள் 4 ஆம் பிரதிவாதி மற்றும் எனது அக்காவின் மக்கள் ஆவார். வழக்கு சொத்துகள் அனைத்து ஒட்டன்சத்திரம் வட்டம், புளியமரத்து கிராமதில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் கருப்பண கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கருப்பண கவுண்டருக்கு 2 மகன்கள், அழகியன கவுண்டர், ஆறுமுக கவுண்டர் என்ற 2 ஆண்மக்கள் என்றால் சரிதான். வேறு வாரிசுகள் கருப்பணகவுண்டருக்கு வேறு வாரிசுகள் யாருமில்லை என்றால் சரிதான். கருப்பண கவுண்டர் காலதிற்கு பிறகு அவரின் வாரிசுகளான அழகியன கவுண்டர், ஆறுமுக கவுண்டர் ஆகியோர்கள் தங்களது மக்கனை கட்டுப்படுத்தி 07.12.1976 அன்று ஒரு பதிவு பெற்ற பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாகம் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 07.12.1976 பாகப்பிரிவினை பத்திரத்திற்கு பிறகு அனைவரும் கூட்டுக்குடும்பமாகவே வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவரவர்கள் தனித்து சென்றுவிட்டார்கள். ஆறுமுக கவுண்டருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். அவர்கள் முதல் மனைவி நல்லம்மாள், 2 வது மனைவி மீனாட்சியம்மாள் ஆவர். மேற்படி முதல் மனைவி நல்லம்மாளுக்கு நாச்சம்மாள், வழக்கின் 1 ஆம் பிரதிவாதி முத்துசாமி, வழக்கின் 3 மற்றும் 4 வாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். 2 மனைவி மீனாட்சியம்மாளுக்கு 1 வாதி ராஜண்ணா, 2 ஆம் வாதி பழனியம்மாள், 2 பிரதிவாதியான நான் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கின் 3 வாதியின் வாரிசுகள் தான் 6 முதல் 8 வாதிகள் என்றால் சரிதான். 1 வாதி ராஜண்ணாவின் வாரிசு 5 வாதி என்றால் சரிதான். 2 வாதி பழனியம்மாளின் கணவர் ஈஸ்வரமூர்த்தி அவர்களின் வாரிசுகள் வழக்கில் 4 முதல் 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 4 ஆம் வாதியின் வாரிசுகள் தான் 9 முதல் 11 வாதிகள் என்றால் சரிதான்.

மேற்படி ஆறுமுக கவுண்டர் இறப்பிற்கு முன்பே அவரின் இரு மனைவிகளும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனவே, ஆறுமுக கவுண்டர் அவரின் சொத்தை பொறுத்து எந்தவிதமான ஏற்பாடும் செய்து வைக்காமல் 22.11.2011 அன்று இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. அவர் எனது மகளுக்கு 08.02.2010 அன்று ஒரு உயில் எழுதி வைத்துள்ளார்.

**வாதி தரப்பில் மேலும் குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க – ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.03.04 16:17:27 +0530

Additional District Judge(FAC),

Dindigul.